கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.24/2021** தேதி: **22.09.2025**

வாதி தரப்பு சாட்சி -2 (வேல்முருகன், த/பெ.பன்னீர்செல்வம்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) அசல் வழக்கு எண் 24/2021 என்ற வழக்கில் வழக்கு சொத்து எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 22/2021 என்ற வழக்கில் உள்ள வழக்கு சொத்து எனது தாயார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது பெற்றோருடன் தான் ஒன்றாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

(2) எனது அப்பா பெயரில் உள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் திருமலை நகரில் உள்ளது. அதில் வீடு உள்ளது. எனது அம்மா பெயரில் உள்ள சொத்து எங்கு உள்ளது என்றால் பெரியசாமி நகரில் உள்ளது . அதில் வீடு உள்ளது.

(3) நான்தாற்போது திருமலை நகரில் உள்ள வீட்டில் வசித்து வருகிறேன். பெரியசாமி நகரில் உள்ள வீட்டில் யார் வசித்து வருகிறார் என்றால் எனது அண்ணன் வசித்து வருகிறார். இந்த இரு சொத்து சம்மந்தமாக பிரதிவாதி முருகன் எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(4) எந்த நீதிமன்றத்தில் எனது அப்பா மற்றும் அம்மா பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அது அசல் வழக்கு எண்.127/2021 ஆகும். அந்த வழக்கு மற்றும் இதர வழக்குகள் அனைத்தும் சேர்ந்து நான் தான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கு ஏற்றதை

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.09.22 17:55:22
+0530

ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் ஆட்சேபனை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தீர்ப்புரைக்கு என்று வைக்கப்பட்ட பின்பு நான் மனு தாக்கல் செய்து அந்த மனு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(5) அம்மா பெயில் உள்ள சொத்திற்கு அசல் வழக்கு எண் 128/2021 ல் மாவட்ட அமர்வுநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் ஒரு தலைப்பட்சமாக 10.03.2023 அன்று தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் இன்றளவும் நிறைவேற்றம் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நிறைவேற்றம் மனு தாக்கல் செய்து எனக்கோ அல்லது எனது தாயாருக்கோ அழைப்பானை ஏதும் வரவில்லை என்றால் சரிதான்.

(6) இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் என்னையோ எனது பெற்றோரையோ வீட்டை காலி செய்யுமாறு மிரட்ட வில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு வேண்டிய பரிகாரம் கேட்டு சட்டப்படித்தான் இன்றளவும் போராடி வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் தாக்கல் செய்யத வழக்கினை கால தாமதம் செய்யவேண்டும் என்ற நோக்கில் தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(7) இந்த வழக்கை தாக்கல் செய்தற்கான வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்க தள்ளுபடிக்க அறுகமானது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.09.22 17:55:28 +0530